Puducherry/Reg.Bulletin/Tamil/18.1ohrs/ 16.6.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 16.6.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும்-சைப்ரசுக்கும் இடையிலான கூட்டாண்மை, பொதுவான ஜனநாயக மாண்புகளை அடிப்படையாகக் கொண்டது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு குறித்து, மத்திய அரசு இன்று, அரசிதழ் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டில் ஒவ்வொருவரும், நாட்டிற்கே முதலிடம் என்ற அடிப்படையில் செயல்பட வேண்டும் என, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் இன்று குடியரசு துணைத் தலைவரை, முதலமைச்சர் திரு ரங்கசாமி சந்தித்து, மாநில அந்தஸ்து குறித்து மனுக் கொடுத்தார்.

மோடி-சைப்ரஸ்

இந்தியாவிற்கும்-சைப்ரசுக்கும் இடையிலான கூட்டாண்மை, சட்டத்தின் ஆட்சி மற்றும் பொதுவான ஜனநாயக மாண்புகளை அடிப்படையாகக் கொண்டது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி

உள்ளார். 2 நாள் பயணமாக சைப்ரஸ் சென்றுள்ள அவர், இன்று நிக்கோசியா-வில் சைப்ரஸ் அதிபர் திரு நிக்கோ கிறிஸ்டோடூலிடெஸ்-சுடன் பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர், கூட்டு செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினார். 2047-ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் விக்சித் பாரத் தொலைநோக்கு திட்டத்திற்கும், 2035-ஆம் ஆண்டிற்கான சைப்ரசின் வளர்ச்சி திட்டத்திற்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பதாகவும், இந்த ஒற்றுமைகளின் அடிப்படையில், அடுத்த 5 ஆண்டுகளுக்கான இருதரப்பு கூட்டாண்மைக்கு வடிவம் கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எல்லை தாண்டிய தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டங்களுக்கு சைப்ரஸ் அளித்து வரும் ஆதரவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டார். தீவிரவாதம் ஆயுதக் கடத்தல் மற்றும் போதை மருந்து கடத்தலை தடுப்பதற்கான தகவல்களை, நிகழ் நேரத்தில் பகிர்ந்து கொள்ள இருநாடுகளுக்கும் இடையே கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டத்தையும் அவர் அறிவித்தார். மேற்காசியா மற்றும் ஐரோப்பாவில் தற்போது நிலவும் பிணக்குகள் குறித்து பிரதமர் கவலை வெளியிட்டார். பிராந்தியத்தில் அமைதி மற்றும் வளத்தை மேம்படுத்துவதில், மத்திய கிழக்கு நாடுகள் வழியாக, இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே பொருளாதார நெடும்பாதை அமைக்கும் திட்டத்தின் முக்கியத் துவத்தை இருநாடுகளும் ஒப்புக்

கொண்டன. பிரதமரின் சைப்ரஸ் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள் ...............

(வாய்ஸ்)

மோடி-சைப்ரஸ்

(வாய்ஸ்)

சைப்ரசில், அந்நாட்டு அதிபருக்கும், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும் இடையே, முன்னதாக பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. வர்த்தகம், முதலீடு, உள்கட்டமைப்பு, தொழில் நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு குறித்தும், கலாச்சாரத் துறையில் உறவுகளை ஆழப்படுத்துவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது. சைப்ரசில் ஆயுர்வேதம் மற்றும் யோகா பிரபலமாகி வருவதை பிரதமர் திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

முன்னதாக சைப்ரஸ் அதிபரை பிரதமர் திரு நரேந்திர மோடி தனிப்பட்ட முறையில் சந்தித்த போது, சைப்ரஸ் அதிபர், அந்நாட்டின் மிக உயரிய சிவிலியன் விருதான, மக்காரியோஸ்-3 கிராண்ட்கிராஸ் விருதை, திரு நரேந்திர மோடிக்கு வழங்கி சிறப்பித்தார். பிரதமர் இதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இது 140 கோடி இந்தியர்களுக்கு கிடைத்த கவுரவம் என்று கூறினார்.

*மக்கள் தொகை*

மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து மத்திய அரசு இன்று, அரசிதழ் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. 2027-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி அடிப்படையில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என, மத்திய உள்துறை அமைச்சகம் இந்த அறிவிக்கையில் தெரிவித்துள்ளது. லடாக் யூனியன் பிரதேசம், மற்றும், ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம், உத்தராகண்ட் மற்றும் இமாச்சல பிரதேசத்தின் பனிமூடிய பகுதிகளில் மட்டும் 2026-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி அடிப்படையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து கூடுதல் விவரங்கள் …………

(வாய்ஸ்)

*மக்கள் தொகை-*

(வாய்ஸ்)

வரவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பு, 2 கட்டங்களாக நடைபெற உள்ளது. முதலாவது கட்டத்தில் வீடுகள் பட்டியலிடப்பட்டு, வீடுகளின் நிலை மற்றும் வீட்டு அளவிலான வசதிகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படும். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வொரு நபரின் சமூக-பொருளாதார நிலை மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட இதர தகவல்கள், 2-ஆவது கட்டத்தில் சேகரிக்கப்படும். இம்முறை மக்கள் தொகை

கணக்கெடுப்பின் போது ஜாதி விவரங்களும் சேகரிக்கப்பட உள்ளன. நாடு முழுவதும் பணிகளில் மொத்தம் 34 லட்சம் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களும், 1.3 லட்சம் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இதர அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இம்முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள், மொபைல் செயலி மூலம் டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்படும். தங்களைப் பற்றிய விவரங்களை தாங்களே சமர்ப்பிக்கும் வசதிகளும் மக்களுக்கு வழங்கப்படும். தரவுகளின் சேகரிப்பு, அனுப்புகை. மற்றும் சேமிப்பு உட்பட எல்லா கட்டங்களிலும் டேட்டா பாதுகாப்பை உறுதிப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இது இந்தியாவின் 16-ஆவது தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பாகவும், விடுதலைக்குப் பிந்தைய 8-ஆவது கணக்கெடுப்பாகவும் அமைகிறது.

தன்கர்

நாட்டில் ஒவ்வொருவரும், நாட்டிற்கே முதலிடம் என்ற அடிப்படையில் செயல்பட வேண்டும் என, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். தேசத்தை கட்டி எழுப்புவதில் சுற்றுச்சூழல் நிலைத் தன்மை என்ற தலைப்பில் புதுச்சேரி ஜிப்மரில் இன்று நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அவர், குறிப்பாக தேசிய பாதுகாப்பு குறித்த பிரச்சனைகளில் அரசியல் கட்சிகள் அரசியல் ஆதாயங்களுக்கு

அப்பாற்பட்டு செயல்படுதல் அவசியம் என்றார். நாட்டிற்கு, அமைதி தான் முக்கியம் என்றும், எப்போதும் போருக்கு தயாராக இருப்பதே அமைதிக்கான உத்தரவாதம் என்றும் அவர் குறிப்பிட்டார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றி மற்றும் கட்டுப்பாட்டுடன் கூடிய அணுகுமுறையால் இந்தியாவிற்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை ஆதாரங்களை பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தி, பூமி தாயைக் காயப்படுத்த கூடாது என்றும், சரியான முறையில், சரியான அளவில் இயற்கை ஆதாரங்களை பயன்படுத்துவதில் முக்கிய கவனம் தேவை என்றும் குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தினார்.

முன்னதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் விழாவில் பேசுகையில், மரம் நடுதல், நகரத்தின் தூய்மையை பராமரித்தல், மற்றும், ஆறுகளைப் பாதுகாப்பதும், தேசப் பற்றுதான் என்றார். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சுற்றுச்சூழல் நிலைத் தன்மைக்கான தூதர்களாக செயல்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார். ஆரோக்கியமான வாழ்விற்கு, தூய்மையான சுற்றுச்சூழல் அவசியம் என முதலமைச்சர் திரு ரங்கசாமி தமது உரையில் வலியுறுத்தினார். பிரதமர் கூறியபடி பெஸ்ட் புதுச்சேரியாக திகழும் புதுச்சேரியில், வறுமை இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு வைத்திலிங்கம், திரு செல்வ கணபதி, அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், ஜிப்மர் இயக்குநர் திரு வீர்சிங் நேகி ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் இன்று ஜிப்மர் வளாகத்தில், தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் கீழ் மரக் கன்று ஒன்றையும் நட்டு வைத்தார்.

*ரங்கசாமி-தன்கர்*

முன்னதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கரை சந்தித்து, புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கக் கோரி மனுக் கொடுத்தார். இக்கோரிக்கை நீண்டகாலமாக நிலுவையில் இருப்பதையும், சட்டப் பேரவையில் இதுகுறித்து பல முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப் பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார். மாநில அந்தஸ்து வழங்கப்பட்டால், புதுச்சேரிக்கு, ஆயிரத்து 500 முதல், 2 ஆயிரம் கோடி ரூபாய் வரை கூடுதல் நிதி கிடைக்கும் என்பது குறித்தும், புதுச்சேரியை முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கான பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இதனால் ஏதுவாகும் என்பது குறித்தும் மகஜரில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ரங்கசாமி-ஊர்க்காவல் □டை

புதுச்சேரி சட்டப் பேரவை செயலகத்தில் 15 அவைக் காவலர் பணியிடங்களை, காவல்துறையில் பணியாற்றி வரும் ஊர்க்காவல் படையினருக்கு பணி மூப்பு அடிப்படையில் ஒதுக்க ஒப்புதல் பெறப்பட்டதைத் தொடர்ந்து இவர்களுக்கான பணி ஆணைகளை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

வானிலை

தமிழகத்திலும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் வரும் 22-ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை நீடிக்க கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் தேனி, தென்காசி மாவட்டங்களில் கனமழைக்கும், கோவை மாவட்ட மலைப் பகுதிகள், மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் தெற்கு குஜராத் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி, வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெறக் கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள அரபிக் கடல் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24

மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் 29 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

நீர் வழிப் □ாதை

மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் இன்று பீகார் மாநிலம் பாட்னாவில் தேசிய நீர் வழிப் பாதைகள் பற்றிய, நாட்டின் முதலாவது ஆலோசனை பயிலரங்கை தொடக்கி வைத்தார். தேசிய நீர் வழிப் பாதைகளில் பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்தை ஊக்குவிக்க, ஒருமாத காலத்திற்குள் சிறப்பு பணிக்குழு அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். கங்கை நதி நெடுகிலும் பயணிகளுக்கான வசதிகளை பெருக்கும் வகையில், வாட்டர் மெட்ரோ தொடக்கப்படும் என்று பாட்னாவில் கப்பல் பழுதுபார்க்கும் வசதிகள் மற்றும் சொகுசு கப்பல் வசதிகள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார். பீகார், ஜார்கண்ட், உத்தரபிரதேஷ் மற்றும் மேற்கு வங்க அரசு அதிகாரிகளும், மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங், மற்றும் சம்பந்தப்பட்ட வர்த்தக பிரதிநிதிகளும் இப்பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும்-சைப்ரசுக்கும் இடையிலான கூட்டாண்மை, பொதுவான ஜனநாயக மாண்புகளை அடிப்படையாகக் கொண்டது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு குறித்து, மத்திய அரசு இன்று, அரசிதழ் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டில் ஒவ்வொருவரும், நாட்டிற்கே முதலிடம் என்ற அடிப்படையில் செயல்பட வேண்டும் என, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் இன்று குடியரசு துணைத் தலைவரை, முதலமைச்சர் திரு ரங்கசாமி சந்தித்து, மாநில அந்தஸ்து குறித்து மனுக் கொடுத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------